thiraimalar.com

# திரைமலர் .காம்

வெள்ளிக்கிழமை தோறும்

மலர்-1 இதழ்-13

10.11.2023

பல்சுவை வார இதழ்

E-magazine



த்ரில்லர் படம் தந்த மு.மாறன் என்ன ஆனார்?

free e-magazine

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வரிசையில் சினித்துறையை சார்ந்த 3வது முதல்வரா?

# உதயநிதி ஸ்டாலின்

# தீவிர அரசியலில் இறங்கும் விஜய்

# ஜெயிலர் வெற்றியால் லால் சலாம் படத்தில் ரஜினிக்கு முக்கியத்துவம்



## டிக்கெட் விலையை அதிரடியாக ஏற்றியது புதுச்சேரி அரசு

தீபாவளி பொங்கல் என்றாலே புதுப்படங்கள் ரிலீஸ், சினிமா, திரையரங்குகள் என்று ஒரு கூட்டம் அலைமோதுவது வழக்கம்.

அந்த வகையில் தற்போதைய தீபாவளிப் பண்டி கைக்கு தமிழகத்தில் உள்ள திரையரங்குகள் நிரம்பி வழியும் இந்த நேரத்தில் சொல்லாமல்கொள்ளாமல், எந்த அறிவிப்பும் இல்லாமல் திரைப்பட டிக்கெட் விலை யானை அளவிற்கு ஏற்றியுள்ளனர்.

புதுச்சேரி ரசிகர்கள் சார்பில், புதுப்படங்கள் என்றாலே முதல் நாள் காட்சிக்கு டிக்கெட் விலை அதிகமாக உள்ளதாக புகார்கள் தெரிவித் திருந்தனர், ஆனால் ரசிகர்களின் புகார்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதில் திரையரங்கு உரிமையாளர்களுக்கு சாதகமாக டிக்கெட் விலையை உயர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளார் புதுச்சேரி மாவட்ட ஆட்சியர்.

தற்போது புதுச்சேரி திரையரங்குகளில் டிக்கெட் விலை உயர்த்தப்பட்டுள்ளது

அதன்படி ரூ. 150க்கு விற்கப்பட்ட பால்கனி டிக்கெட் ரூ.170 ஆகவும், ரூ.100க்கு விற்கப்பட்ட முதல் வகுப்பு டிக்கெட் ரூ. 130க்கும், இரண்டாம் வகுப்பு ரூ. 70 லிருந்து ரூ. 100, மற்றும் மூன் றாம் வகுப்பு ரூ. 50ல் இருந்து ரூ. 60 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

## கார்த்தியின் ஜப்பான் தேறுமா? எளிய விமர்சனம்....

ஜப்பான் படம் தமிழகத்தில் லலிதா ஜூவல்லரியில் நடைபெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபரை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம்.

நகை கொள்ளையனை கண்டுபிடிக்க முடியாமல் தவித்த தமிழக போலீசார், வாகன சோதனையில் ஈடுபடும்போது கர்நாடக போலீசாரின் வாகனத்தை சோதனை செய்யும்போது மேற்கண்ட நகைக் கடையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் பிடி பட்டது,

இதைதீவிரமாக விசாரிக்கும்போது பல்வேறு




திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கிறது.

இந்த தகவல்களில் சற்று மானே... தேனே போட்டு படத்தை எடுத்திருக்கிறார்கள்.

நடிகர்கள் யோக்கியஸ்தர்கள் போன்று காட்டிக் கொள்ளுவதைப் போன்று இந்தப் படத்திலும் மற்றவருக்கு அதிகமாக அறிவுரை கூறுவது, காவல்துறையை நையாண்டி கேலி செய்வது போன்ற காட்சி அதிகம்.

ராஜூமுருகன் இயக்கத்தில் கார்த்தி நடித்துள் ளார். மேலும், அனு இமானுவேல், ஜித்தன் ரமேஷ், சுனில், கே.எஸ்.ரவிகுமார், விஜய் மில்டன், வாகை சந்திரசேகர், பவா செல்லதுரை உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க எஸ்.ஆர்.பிரபு வின் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது.

வழக்கம் போல இப்படத்தில் கதாநாயகிக்கு முக்கியத்துவம் இல்லை...

சிறுத்தைப் படத்திற்கும் இந்தப் படத்திற்கும் சற்றுதான் வித்தியாசம் உள்ளது, மற்றபடி சிறுத்தை யில் உள்ளதுபோன்றே திருடன் காட்சியமைப்பு பல்வேறு இடங்களில் அப்பட்டமாக தெரிகிறது.

லாஜிக் பார்த்து படத்தை பார்க்காமல் மேஜிக், ஜோக்குடன் சம்பந்தப்படுத்தி பார்த் தால் நல்ல படம்தான் இது. பொதுவாக சிவக் குமார் குடும்பத்தினர் நடிக்கும் படத்தில் பொதுமக் களை முட்டாளாகவும், தாங்கள் மட்டுமே அறிவாளி களாகவும் காட்டிக் கொண்டு, பொதுமக்களுக்கு அறிவுரை கூறும் காட்சிகள் அதிகம் இருக்கும். அது இந்த படத்தில் அதிகமாகவே உள்ளது.

தமிழ்நாடு மட்டுமல்ல கேரளா போன்ற எந்த மாநிலம் என்றாலும் காவல்துறையிலும் கருப்பு ஆடுகள் இருப்பதால்தான் திருடர்கள் எந்த பிரச்சனையும் இல்லாமல் சுற்றுகிறார்கள் என்று காவல்துறையை அதிகமாகவே கலாய்த்துள்ளனர்.

## தீவிர அரசியலில் காய் நகர்த்தும் விஜய்



தன்னுடைய விஜய் மக்கள் இயக்கம் சார்பாக பல நற்பணிகளை செய்து வரும் விஜய் சமீப காலமாக தேசிய தலைவர்களின் பிறந்த நாட்களில் அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்க சொல்லியிருக்கிறார்.

மேலும் அரசியல் தலைவர்கள் பிறந்த நாளில்

அவர்களை போனில் அழைத்து வாழ்த்தும் சொல்லி வருகிறார்.

சமீபத்தில் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார் நடிகர் விஜய்.

இந்த நிலையில் நவம்பர் 8ம் தேதி நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார் விஜய்.

அப்போது பல சந்தர்ப்பங்களில் எனக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு நீங்கள் குரல் கொடுத்து வருகிறீர்கள் அண்ணா. என விஜய் நன்றியும் தெரிவித்திருக்கிறார்.

நீ என் தம்பி.. உனக்காக நான் நிற்க மாட்டேனா.? என சீமான் விஜய்யிடம் சொன்னதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

2026 சட்டமன்றத் தேர்தலை குறிவைத்து நடிகர் விஜய் தீவிர அரசியலில் நுழைய அதிக ஆர்வம் காட்டி வருகிறார். அதற்கான நகர்வுகளாக இந்த நிகழ்வுகள் கூறப்படுகிறது.

## த்ரில்லர் பட இயக்குநர் மு.மாறன் என்ன ஆனார்?



பத்திரிகை துறையில் கோலோச்சியிருந்த சமயத்தில் டைரக்டர் சுரேஷ் கிருஷ்ணாவுடன் துணை இயக்குநராக பணியாற்றி ஒருசில படங்களில் துணை இயக்குநராக சினிமாத்துறையில் ஜொலித்தவர் மு.மாறன்.

இவர் கலைஞரின் பேரனான அருள்நிதியை வைத்து இயக்கிய த்ரில்லர் படம் இரவுக்க ஆயிரம் கண்கள், 2018 இல் வெளிவந்த தமிழ் அதிரடித் திரைப்படமாகவும் விளங்கியது.

இந்தப் படம் சூப்பர் ஹிட் த்ரில்லர் படமாக ரசிகர்கள் மத்தியில் பிரபலமாயின.

இப்படத்தின் முக்கிய கதாபாத்திரங்களின் பெயர்களை, பிரபல தமிழ் மர்மக்கதை எழுத்தாளர்களின் துப்பறியும் கதாபாத்திரங்களின் பெயராக வைத்து எடுக்கப்பட்டது.

இவரின் இந்தப் படத்தின் வெற்றியைப் பார்த்து, அடுத்த படத்திற்கு கால்ஷீட் கொடுத்தார் உதயநிதி ஸ்டாலின். கண்ணை நம்பாதே படத்தை எழுதி இயக்கிய மாறனின் எந்தப் படமும் வெளிவராததால், த்ரில்லர் பட இயக்குநரின் அடுத்த படத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் ரசிகர்கள்.



## ஜெயிலர் வெற்றியால் லால் சலாம் படத்தில் ரஜினிக்கு முக்கியத்துவம்

தென் தமிழகத்தின் கிரிக்கெட் வீரர்களின் கேரியரை மையமாக வைத்து உருவக்கப்பட்டு வரும் திரைப்படம் லால் சலாம். இப்படத்தினை லைகா நிறுவனம் தயாரித்து வருகிறது. ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கி இருக்கிறார். முக்கிய வேடத்தில் ரஜினிகாந்த் நடிக்க இருக்கிறார்.

முதலில் சின்ன ரோலில் தான் ரஜினியை நடிக்க வைக்க கேட்டு இருக்கிறார் ரஜினிகாந்த். ஆனால் ஜெயிலர் வெற்றியை தொடர்ந்து ரஜினிகாந்துக்கு இரண்டாம் பாதியில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறதாம். படத்தில் ஹீரோவாக விஷ்ணு விஷால், விக்ராந்த் முக்கிய வேடத்தில் நடிக்க இருக்கிறார்களாம்.

சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகள் துவங்க இருந்தது. ஆனால் திடீரென லால் சலாமின் முக்கிய புட்டேஜ்கள் மிஸ்ஸானதாகவும் அதில் அதிகம் ரஜினியின் காட்சிகளே இருந்ததாக ஒரு தகவல் கசிந்தது. பின்னர் அது உதவி இயக்குனர்களால் பரபரப்பட்ட வதந்தி எனவும் கூறினர்.

# தேசிய விருதை தவறவிட்ட சங்கர்



டெக்னாலஜி இல்லாத காலகட்டத்தில் கூட மிக பிரம்மாண்ட படத்தை எடுத்து இந்திய சினிமாவில் ஒரு தவிர்க்க முடியாத இயக்குனராக மாறினார். ஜெண்டில்மேன், முதல்வன், சிவாஜி, எந்திரன், 2.0 போன்ற பல பிரம்மாண்ட படைப்புகளை கொடுத்து தமிழ் சினிமாவிற்கு பெருமை சேர்த்தவர்.

இந்த நிலையில் இயக்குனர் பாண்டிராஜ் சங்கர் குறித்து ஒரு தகவலை கூறியிருக்கிறார். பாண்டிராஜ் 'பசங்க' திரைப்படத்தின் மூலம் முதன்முதலில் இயக்குனராக அறிமுகமானார். அந்தப் படத்தை தயாரித்தது நடிகர் சசிகுமார் நிறுவனம் தான்.

ஆனால் பசங்க திரைப்படத்தை முதலில் தயாரிக்க இருந்தது இயக்குனர் சங்கர்தானாம். பசங்க திரைப்படத்தின் கதையை சங்கரிடம் பாண்டிராஜ் போய் சொல்லியிருக்கிறார். கதையை கேட்டுவிட்டு சங்கர் 33 இடத்தில் சிரித்தாராம்.

இதையெல்லாம் பாண்டிராஜ் குறித்துவைத்துக் கொண்டாராம். இருந்தாலும் கதையில் சங்கர் கன்வின்ஸ் ஆகவில்லையாம். இந்தப் படத்தை தயாரிக்க தயங்கியிருக்கிறார். இதை தெரிந்து கொண்ட பாண்டிராஜ் நேராக சசிக்குமாரிடம் செல்ல அவர் தயாரிக்க முன்வந்திருக்கிறார்.

சுப்பிரமணியபுரம் படம் வெளியாகி சசிகுமார் மிகவும் பிரபலமாக இருந்த நேரம். அந்தப் படத்திற்கு பிறகு பசங்க படத்தை தயாரித்திருக்கிறார் சசிகுமார். பசங்க படம் மூன்று தேசிய விருதுகளை தட்டிச் சென்ற படமாக அமைந்தது.

ஜேம்ஸ் வசந்தன் இசையில் வெளியான இந்த பசங்க திரைப்படம் ஏராளமான சினிமா விருதுகளை ரிலீஸ் நேரத்தில் தக்க வைத்துக் கொண்டது.

# அன்று கேட்ட வாய்ப்பு இன்று வழங்கிய கமல்

ஜெயம் ரவியின் நடிப்பில் வெளிவந்த படங்கள் நஷ்டத்தை சந்திக்காமல் தயாரிப்பாளர்களுக்கு ஓரளவுக்கு லாபத்தை கொடுப்பதால் ஜெயம்ரவியை இயக்க யாரும் தயங்குவதில்லை.

இவர் ஒரு மினிமம் கேரண்டி ஹீரோவாக வலம் வருகிறார். பிரதீப் ரங்கநாதன் இயக்கத்தில் இவர் நடித்து வெளியான கோமாளி திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. அதேபோல், ரவியின் அண்ணன் ராஜாவின் இயக்கத்தில் அவர் நடித்த தனி ஒருவன் திரைப்படமும் ரசிகர்களிடம் பாராட்டை பெற்றது.

கடந்த சில வருடங்களாக அவரின் நடிப்பில் வெளியாக்கும் படங்கள் பெரிய வெற்றியை பெறுவதில்லை. அப்போதுதான் மணிரத்தினம் இயக்கத்தில் வெளிவந்த பொன்னியின் செல்வன் அவருக்கு கை கொடுத்தது.

ஜெயம் ரவியின் கையில் இப்போது 9 படங்கள் இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு கமல்ஹாசன் கலந்து கொண்ட ஒரு விழாவில் பேசிய ஜெயம் ரவி 'கமல்சார் நடித்த ஆளவந்தான் படத்தில் நான் உதவி இயக்குனராக வேலை செய்தேன்'.



அது அவருக்கே தெரியாது. ஏனெனில், அவரை பார்த்தாலே நான் அந்த பக்கம் ஓடிவிடுவேன். நான் நடிக்கிறேன் எனில் அதற்கு 85 சதவீதம் காரணம் அவர்தான். அவர் இருக்கும் ஒரு மேடையில் விருது வாங்க வேண்டும் என நான் நினைத்தேன். அது இப்போது நடந்திருக்கிறது' என அவர் பேசினார்.

மேலும் 'சார்.. நான் உங்களோட மிகப்பெரிய ரசிகன். எப்ப தேவை என்றாலும் என்னை கூப்பிடுங்கள். உங்க கூட இருக்கணும்னு ஆசை' என பேசியிருந்தார். இப்போது மணிரத்தினம் இயக்கத்தில் கமல் நடிக்கும் தக் லைப் படத்தில் ஜெயம் ரவிக்கு ஒரு வேடம் கொடுத்திருக்கிறார் கமல். எத்தனை படங்களில் நடித்தாலும் ஜெயம் ரவிக்கு இந்த படம் கண்டிப்பாக ஒரு ஸ்பெஷல் படமாக அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# அந்தப் பழைய தீபாவளி பண்டிகையை அனுப்பி வைங்க




பத்து நாட்கள் முன்னதாகவே பட்டாசுகளை காயவைக்கும் சாக்கில் தொட்டுப்பார்த்து சந்தோஷப் பட்டு...

விரல்விட்டு நாட்களை எண்ணிப்பார்த்து...

நண்பர்கள் யார்யார் வீட்டில் எவ்வளவு ரூபாய்க்கு பட்டாசு வாங்குவார்கள் என ஆராய்ச்சி செய்து...

புதுத்துணி தைக்க கொடுத்து, தையல்காரர் தைத்து கொடுத்து விடுவாரா என நினைத்தபடியே ஏங்கி...

நமக்குத்தெரியாமல் அப்பா அம்மாக்கள் அதை வாங்கி பாழாப்போன surprise என்ற பேரில் ஒளித்து வைத்திருக்க...!?

பக்ஷணங்கள் தயாரகும்போதே அவசர அவசரமாக உம்மாச்சிக்கு காட்டிட்டு வாயில் போட் டுக்கொள்ள !

தாத்தா, பாட்டியோடதான் தீபாவளி என்று ஆசையோடு அப்பாகூட ஜன்னல் வழியாக இடம் போட்டு பஸ்ஸில் பயணம் செய்து

thiraimalar.com
திரைமலர்

...

அங்கே உள்ள பழய, புதிய friends கூட ஜாலியாகப்பழகி !?

பந்துக்களுடைய பாச மழையில் நனைந்து...

முதல்நாள் மாலையே அப்பா கையைபிடித்து மத்தாப்பு புஸ்வாணங்கள், தரைச்சக்கரங்கள் விட்டு, கிட்டேவரும்போது பயந்து தாண்டி குதித்து

பிறர் கேலி செய்ய...

ம் ம் ஆச்சு போறும் சீக்கிரம் படு, விடிஞ்சா தீபாவளி, சீக்ரம் எழுந்துக்கணும் என விரட்டும் தாத்தாவுக்கு பயந்து கள்ளத்தூக்கம் தூங்க ஆரம் பித்து உண்மையாகவே தூங்கி வழிந்த...

காலையில் மூன்று அல்லது நான்கு மணிக் கெல்லாம் பலவந்தமாக எழுப்பி பாதி தூக்கத்திலேயே தன் பழுத்த கைகளால் இளஞ்சூட்டோடு கூடிய பாசத்தில் பாட்டி எண்ணை தேய்த்த...

அந்த இருட்டிலே கொட்டாங்குச்சி சிரட்டையால் வெந்நீர் அடுப்பை நம் தாத்தா ஊதிக்கொண்டிருந்த...

நாம் முரண்டுபிடிக்க எண்ணைபோக சீயக்காய் பொடியை அம்மா தேய்க்க நம் கண் எரிந்த அந்த...

ஸ்வாமி முன்னாடி மஞ்சள் தடவிய புத்தாடையை பெரியவர்கள் எடுத்து தர அதை மாட்டிக்கொண்டு பட்டாசை தூக்கிக்கொண்டு தெருவில் ஓடிய.....

கூப்பிட்டு நமஸ்காரம் பண்ணச்சொல்லி, இந்தா தீபாவளி இனாம் என்று 1 ரூ. நோட்டை அப்பா தர, வாயில் சுழிக்க சுழிக்க தீபாவளி மருந்தை அம்மா ஊட்டிய....

கங்காஸ்நானம் ஆச்சா என்று கையில் உக்காரை, மிக்சருடன் பக்கத்தில் உள்ள பெரியவர்களிடம் நம்மையும் கையில் இழுத்துக்கொண்டோடிய....

அவர்கள் தீபாவளி துட்டு என்று ஆசையாக நாலணா தந்த...

காலை 6 மணிக்கெல்லாம் தீபாவளிக் இட்லி யும் பஜ்ஜியும் சாப்பிட்ட..

சட சட என சரம் வெடிப்பதை பார்த்து துள்ளும்போது, சனியனே காசைக்கரியாக்காம ஒண்ணொண்ணா பிரித்து வெடிடா என்று தாத்தா திட்டிய...

ரெண்டு சீனி வெடியை சேர்த்து, கொட்டாங்குச்சி ஓட்டைக்குள், மண்ணைக்கவித்து அதில் சொருகி என வித விதமாக ரசித்துக்கொண்டாடிய...

நம் சரக்கு காலியானபின் அக்கம்பக்கத்தில் ஏதாவது தலை தீபாவளிக்கு அதிகமாக பட்டாசு வெடிப்பதை அப்பாம்மாவுக்கு தெரியாமல் நம் கௌரவம் குறையாமல் தள்ளி நின்னு வேடிக்கை பார்த்த...

ராத்திரியில் சீக்கிரமே ஊர் களைப்பால் ஓய்ந்திட. நம்மை ஏக்கத்திலும் தூக்கத்திலும் ஆழ்த்தி நாம் அறியாமல் விடைபெற்றஅந்த தீபாவளியை எங்கேயாவது பார்த்தால் அனுப்பி வைங்கோளேன்....!!!??



# மூக்குப்பொடி

பட்டணம்பொடி, மூக்குப்பொடி, புகையிலைத்தூள், வாசனைப்புகையிலை போன்றவை எல்லாமே புகையிலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட புகை உண்டாகாத உபயோக முறைகள்.

முதலில் ப்ரேசில் மக்கள் 15-16வது நூற்றாண்டுகளில் இலைகளைப் பொடியாக்கி, உறிஞ்சுவது அல்லது மெல்லுவதை வழக்கமாகக் கொண்டனர். நன்றாக இறுக்கிமூடிய பாத்திரங்களில் பாதுகாப்பாக வைத்துக் கொண்டனர்.

கரீபியன் தீவுகளுக்கு கொலம்பஸ் பிரயாணம் செய்த போது, இந்த வகை புகைஇலை தாவரங்களை எடுத்துச் சென்று ஐரோப்பாவில் உபயோகிக்கத் தொடங்கினர்.

இவ்வாறாக புகையிலை சிகரட், மூக்குப்பொடி, வாயில்போடதூள் என மக்கள் உபயோகிக்கத் தொடங்கினர்.

thiraimalar.com திரைமலர்

17-18வது நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் ஆசியா இந்தியாவுக்குப் பரப்பினர்.

சிகரட், பீடி உபயோகங்கள் வந்த பிறகு மூக்குப்பொடி பழக்கம் குறையத் தொடங்கியது.

ஓசிப் பொடிதனை நாசியில் இட்டால்,
காசிக்குப் போனாலும் கருமம் தீராது.

மதராஸ் பட்டணம் பொடி என்றால் பெரிசுகளுக்கு அண்ணா, செம்மங்குடி ஞாபகம் வரும். இடையே இடையே மூக்குப் பொடி உறிஞ்சினால்தான் இவர்களுக்கு பேச்சு, பாடுவதை தொடரமுடியும்.


புகையிலை, சுண்ணாம்பு, நெய் மற்றும் சில ரகசிய வாசனைத் திரவியங்களைக் கலந்து நன்றாக மசித்து அரைத்து தயாரிக்கப்பட்ட பொடி பவுடர். இந்தப் பொடியில் வாசனை முக்கியம். அதனால் காற்றுபுகாதவாறு மூடிப்பாதுகாக்க வேண்டும்.

ஆரம்ப காலங்களில் மூக்குப் பொடி உறிஞ்சுபவர்கள், ஒரு கர்சிப், துண்டு வைத்துக் கொள்ளவேண்டும். மூக்கில் நீர் உண்டாகும்.






thiraimalar.com திரைமலர்







மூக்குப்பொடிகளில் 2 வகைகள். பொடி, பசை.

சிகரட் கேன்சரை உண்டாக்கும் என ஐரோப்பாவில் தடைசெய்த போது மூக்குப் பொடி உறிஞ்சும் பழக்கம் அதிகமாகிவிட்டது. குளிருக்கு சிகரட் இதமாக இருக்க சிகரெட்டே பிரபலமாக ஆனது.

புகையிலை மொத்தத்தில் ஆரோக்கிய கெடுதலானவைகளே. சிகரெட்டில் தார், நிகோடின் நுரையீரல் செல்லும்போது, கேன்சரை உண்டு பண்ணுகிறது. புகையிலையை வாயில் மெல்லும்போது பல், வாய் கேன்சர் உண்டாக வாய்ப்புகள் அதிகம். மூக்குப் பொடி ஓரளவு குறைந்த ஆபத்து. ஆனாலும் மூக்குப்பொடி புகையிலையில் நைட்ரோசாமின்ஸ், கேட்மியம், பொலனியம், பார்மல்டிஹைட், பாலிசைக்ளிக் அரோமடிக் ஹைட்ரோகார்பன், ஈயம், நிகோடின் இவ்வளவு சமாசாரங்கள் அடங்கிய கெட்ட ஆரோக்கியத்தடை இலை.

கதை, கவிதை, நேர்காணல், துணுக்கு செய்திகள், ஜோக், சினித்துறை செய்திகள் அனைத்தையும் வரவேற்கிறோம்.

## நமது இதழில் உங்கள் படைப்பு வெளிவரவேண்டுமா?

சாதனையாளர், தொழில்முனைவோர், கல்வியாளர், கலைத்துறையினர், சமூக சேவையாளர், சிந்தனையாளர், கவிஞர் என அனைத்து துறையினரின் சாதனைகளையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்த எங்களை தொடர்பு கொள்ளவும்.

+919444264610

அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# இறுதிக்கட்ட படப்பிடிப்பில்...



**கதாநாயகிகள்:**
சிவானி,
பாடி நீ குமார்

**கதாநாயகர்கள்**
நட்டி நடராஜன்,
நிஷாந்த் ரூஸோ

**முக்கிய நடிகர்கள்:**
நிழல்கள் ரவி, ஜீவா ரவி, ஆனந்த் குமார்,
ஜெய்சங்கர், அக்கரை பாலு
மற்றும் கமர்சியல்
ஆர்ட்டிஸ்ட்

# அனைவருக்கும்
# தீபாவளி நல்வாழ்த்துக்கள்









# வெள்ளைக்கார நாய்களை வெளுத்து காட்டிய நிஜ ஹீரோ

உலகில் உள்ள நாடுகளை அடிமையாக்க வெள்ளைக்காரன் பல்வேறு உத்திகளை கையாண்டான், ஒருசில இடங்களில் தங்களது படையை பயன்படுத்தினான், ஒருசில நாடுகளில் தங்கள் நாட்டில் உள்ள அழகிகளைப் பயன்படுத்தி அவர்கள் மூலம் நாட்டை அடிமைப்படுத்தும் வேலையில் ஈடுபட்டான், இந்தியாவில் கூட வியாபாரம் என்ற போர்வையில் புகுந்து இங்குள்ள அரசர்களுக்கு வெள்ளைக்கார அதிகாரிகளின் பெண்கள், மனைவிகளின் மூலம் மோகத்தை உருவாக்கி மெல்ல குறுநில மன்னர்களை தங்கள் வசப்படுத்தி, படிப்படியாக பாரதத்தை வெள்ளைக்காரன்


thiraimalar.com
திரைமலர்

ஆட்சி அதிகாரத்தை செய்ய ஆரம்பித்தான், 200 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக நேதாஜியின் படைபலத்திற்கு பயந்து வேறு வழியின்றி, தான் தோற்றதாக காட்டிக்கொள் ளாமல் காந்தியிடம் சுதந்திரத்தை கொடுத்துவிட்டு தப்பிப் பிழைத்து மீண்டும் தங்கள் நாட்டிற்கு ஒடி னான்.

ஆனாலும் இன்றும் இந்தியாவில் அந்த வெள்ளையர்களின் எச்சங்கள் அதிகம் உள்ளது, இந்தியாவில் பல இடங்களில் அவர்களின் சிலை கள், சாலை பெயர்கள் போன்றவற்றை அகற்ற முடியாதபடி உள்நாட்டிலேயே அவர்களின் கைப்பிள்ளைகளை வளர்த்துவிட்டு சென்றுவிட்டனர்.

ஆனால், இந்த வெள்ளைக்கார நாய்களின் அதிகார போக்கு உலகின் அனைத்துப் பகுதிகளி லும் கோலோன்ற முடியவில்லை. உதாரணத்திற்கு பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற ஒரு நிகழ்வை உதாரணமாக கூறலாம்.

பிலிப்பைன்ஸ் தீவில் இருந்த ஆதிகுடிகள் வாழ்நாளில் இதுநாள் வரை கண்டிராத காட்சியை கண்டார்கள். நாலு பெரிய கப்பல்கள், அதில் ஏராளமான பீரங்கிகள், துப்பாக்கி ஏந்திய வெள்ளை மனிதர்கள், உடலெங்கும் இரும்புக்கவசம், கையில் இரும்பால் ஆன வாள், ஈட்டி, பயோனெட்டுகள்....

ஆனால் ஆதிகுடிகளிடம் இருந்தது மூங்கிலால் ஆன அம்புகள், வேல், வில் அம்புகள் தான்.

கப்பலின் மாலுமி மெகெல்லன்...

உலகை முதலில் சுற்றி வந்த கொலம்பஸை மிஞ்சும் கேப்டனவே திகழ்ந்தான் மெகெலன்.

"ஸ்பானிய அரசரை தலைவராக ஏற்றுக் கொண்டு கப்பம் செலுத்தினால் மன்னித்து விட்டு விடுகிறேன்" என்றான்.

இன்று ஒரு ஏலியன் விண்கலம் நாம் கண்டிராத ஆயுதங்களுடன் வந்து நம்மிடம் சரண்டைய சொல்வதுபோல் தான் அது. பீரங்கிகள் விண்ணில் வெடித்து பயம் காட்டின, துப்பாக்கிகள் சுடபட்டன.

வேறு யாராக இருந்தாலும் சரணடைந்து உயிர் பிழைத்திருப்பார்கள்.

ஆனால் பூர்வகுடிகளின் தலைவன் லாபுலாபு மாவீரன்மட்டுமல்ல, மிக சிறந்த ராஜதந்திரியும் கூட வாழ்நாளில் இதுநாள்வரை கண்டிராத ஆயுதங்களை கண்டாலும் விரைவில் அவற்றை எடைபோட்டார்.

கப்பலில் இருக்கும் பீரங்கிகளை தரையில் இறக்கமுடியாது. தரை முழுக்க பாறைகள். பீரங்கிகள் ரேஞ்சில் அவர்கள் குடியிருப்பு இல்லை.

துப்பாக்கிகள் தான் பயமுறுத்தின. ஆனால் அவற்றை தாண்டி அவர்களை நெருங்கினால் ஸ்பானியர்களின் கவசம் இருக்கிறது. ஆனால் அவர்களின் கால்களில் கவசம் இல்லை.

மேலும் மெகல்லன் கம்பீரமாக இருந்தார்... அவர் ஒரே ஒருவரை வீழ்த்தினால் போதும். போரில் வென்றுவிடலாம்.

கணக்குபோட்டு சரண்டைய மறுத்தார் லாபுலாபு போர் துவங்கியது..

கணக்குபோட்டது போல் பீரங்கிகளால் கரையில் இருப்பவர்களை சுட முடியவில்லை. படகுகளில் ஏறி 135 ஸ்பானியர்கள் கரைக்கு துப்பாக்கியால் சுட்டபடி விரைந்தார்கள்.

முதலில் துப்பாக்கி படை கரை இறங்கியது. அவர்கள் அங்கிருந்தபடி பூர்வகுடிகளை நோக்கி சுட்டார்கள்.

துப்பாக்கி ரேஞ்சை அழகாக கணக்கிட்டு அதற்கு கொஞ்சம் தள்ளி, தள்ளி தன் படைகளை நிறுத்தினான் லாபு லாபு. அரைமணி நேரம் சுட்டபின் குண்டுகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன.

அதன்பின் தன் 1,500 வீரர்களிடம் ஒரே கட்டளை மட்டுமே பிறப்பித்தார் லாபு லாபு

"வேகமாக ஓடுங்கள். 1500 பேரும் குறிவைத்து மெகல்லன் ஒருவரை மட்டுமே கொல்ல முயல வேண்டும். வேறு யாரையும் தாக்ககூடாது. ஸ்பானியர்கள் குறுக்கே வந்தால் அவர்கள் கால்களில் அம்புவிடுங்கள், ஈட்டியால் குத்துங்கள்.."

1500 பேரும் பாய்ந்தார்கள்... ஸ்பானியர்கள் அலட்சியமாக மூங்கில் ஈட்டிகளை கவசம், பயோனெட்டை வைத்து தடுக்க, ஈட்டிகள் அவர்கள் கால்களில் இறங்கின. வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல நேராக மெகல்லனை நெருங்கி ஈட்டியால் காலில் ஒரு குத்து. அவர் கீழே விழுந்தார். விஷ அம்பு ஒன்றை காலில் ஏவி அவர் கதையை முடித்தார்கள்.

மீதமிருந்தஸ்பானியர்கள் அதன்பின் துண்டை காணொம், துணியை காணோம் என படகுகளில் ஏறி கப்பலுக்கு தப்பி ஓடினார்கள். மெகெல்லன் பிண மாக பூர்வகுடிகளிடம் இருந்தார். தட்டுதடுமாறி ஸ்பானியர்கள் அதன்பின் ஸ்பெயின் வந்து சேர்ந்தார்கள்.

அதன்பின் 44 ஆண்டுகள் லாபுலாபு உயிருடன் இருந்தவரை பிலிப்பைன்ஸை வெற்றிகொள்ள முடியவில்லை. இன்று அவர் பிலிப்பைன்ஸின் தேசிய ஹீரோ. பிலிப்பைன்ஸில் அவரது சிலைகளை பல இடங்களில் காணலாம்.

மூங்கிலை ஆயுதமாக கொண்ட குடிகளில் இருந்து இப்படி ஒரு ராஜதந்திரியும், மாவீரனும் உருவாவார்கள் என யாரேனும் கற்பனையாவது செய்து பார்த்திருக்க முடியுமா?

நம் பலம், எதிரியின் பலம்... இவற்றை சரியாக அளவிட்டு போரிட்டால் எந்த போரிலும் வெற்றிகொள்ள முடியும்.

# பாகிஸ்தான் சமூகவலைத்தளத்தில் பரவும் ஒரு பாகிஸ்தானியரின் புலம்பல்

நம்மோடு சக காலத்தில் சுதந்திரம் பெற்ற இந்தியாவை பாருங்கள்.. உலகத்தின் கடைசி உச்சத்தை அடைந்து விட்டது இந்தியா

சந்திரயான்3 வெற்றி பெற்றது குறித்து உலக நாடுகள் அவதானித்து கொண்டு இருக்கிறது.

உலக நாடுகள் வெளியே வீரன் போல் காட்டினாலும் அவனிடம் பேசுவதற்க்கே பயப்படுகிறான்

ஆனால் நம் மக்கள் காலையில் முழித்தவுடன் அனைவருக்குமான கேள்வி இதுதான்.. கிரிக்கெட் ஸ்கொர் என்ன? எத்தனை விக்கெட்? பாபர் அசாம் பல்துலக்கினாரா? முகம்மது ஹாசிம் தூங்கினாரா?

கிரிக்கெட்டில் இந்தியாவுடன் பாகிஸ்தான் வெற்றி பெற்று விடடால் போதும்.. எதோ உலகத்தை ஜெயித்தது போல் ஒரு ஆரவாரம்.. இப்படி உங்க வாழ்க்கை ஓடி கொண்டு இருக்கிறது.. இதனால என்ன சாதிக்க போறீங்கன்னு எனக்கே தெரியல...

இன்று அவன் உலகத்தை ஜெயித்து விட்டான்..

உங்களுக்கு கொளரவம், நாடு ஜெயித்தாச்சு. எங்க நாடு ஜெயித்தாச்சு.. எதுலடா ஜெயித்திங்க..

கடன் வாங்கி, கடன் வாங்கி நாடு நாசமாகி விட்டது... இதை பற்றி எவனுக்கும் அக்கறை இல்லை..

இன்னைக்கும் சவூதி காலில் விழுந்து பணம் கேட்டு கொண்டு இருக்கிறோம்.. சீனாக்காரன் எதாவது தருவானா என்று நாக்கை தொங்க போட்டு கொண்டு அலைகிறோம்..

அவன் அனைத்து கடன்களையும் அடைத்து, அனைத்து ஆயுதங்களையும் சோதனை பண்ணி, நீங்கள் எட்டாத தூரத்திற்கு சென்று விட்டான்..

இன்றைய உலகத்தில் ஒரு நாடு, ஒரே நாடாவது உங்களை மதிக்குதா? இல்லை...

அடேய் கிரிக்கெட் கோமாளிகளா, நம்ம அரசு கிட்ட 4 பில்லியன் டாலர் தான் கையிருப்பே இருக்கு... ஆனால் இந்திய தனியார் நிறுவனம் விமானம் வாங்க மட்டும் 70 பில்லியன் டாலருக்கு ஒப்பந்தம் போட்டிருக்கு.. இதில் இருந்தே புரிகிறதா இந்தியாவோட பலத்த...

யானையின் பலம் யானைக்கு தெரியாது....

thiraimalar.com திரைமலர்

# எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வரிசையில் சினித்துறையை சார்ந்த 3வது முதல்வரா?

# உதயநிதி ஸ்டாலின்



திரைத்துறை என்பது ஒரு விசித்திரங்கள் நிறைந்த ஒரு ஆடுகளமாகவே உள்ளது. அந்த வகையில், யாரை எப்போது எப்படி மாற்றிவிடும் என்பது அவர் களுக்கே தெரியாது.

அதுவும் தமிழ்த் திரையுலகத்தில் ஒருவரை பிடித்துவிட்டால் அவரின் எந்த செயலையும் ரசிகர்கள் பொறுத்துக் கொள்வார்கள்.

அவர்களை புகழின் உச்சானிக்கே கொண்டு சென்றுவிடுவார்கள். அந்த வகை யில் புகழின் உச்சானிக்கு சென்ற முதல் நடிகர் எம்.ஜி.ஆர்.

அவருக்கு நிகர் அவரே என்று மற்ற எவரையும் அவருடன் இணைக்கும் எண்ணம் சிறிதுமின்றி அவரின் படங்களுக்கு மிகப்பெரிய வெற்றியை கொடுத்ததுடன், அரசியல் வாழ்வை அவர் துவங்கும் சமயத்தில் உறுதுணையாக இருந்து தமிழகத்தை ஆளும் பொறுப்பை தொடர்ந்து கொடுத்து வந்தது ரசிகர்கள் கூட்டம்.

அதன்பின் அவரின் பாசறையில் வளர்ந்த ஜெ.ஜெயலலிதாவிற்கு அந்த வாய்ப்பை ரசிகர்கள் கொடுத்தனர்.

இந்த இருவரும் சினிமாத் துறையில் இருந்து அரசியல் துறையில் சாதித்து, திறம்பட தமிழகத்தை ஆண்டவர்கள்.

இவர்களுக்கு பின் இதுவரை வேறு எந்த நடிகர்களுக்கும் இந்த அளவிற்கு முக்கியத்துவத்தை தரவில் லை ரசிகர்கள்.

எந்தவித பின்னூட்டமும் இல்லாமல் சினிமாவில் இருந்து அரசியலில் சாதித்ததவர்கள் இந்த இரண்டு பேர் மட்டுமே, இவர்களைப் போன்றே சினித்துறையில்மட்டுமல்ல அரசியல் துறையிலும் சாதிக்க வேண்டும்

என்று பல்வேறு நடிகர்கள், நடிகைகள் கங்கணம் கட்டிக் கொண்டு அரசியலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டாலும் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

பல்வேறு நடிகர்கள், நடிகைகள் முதல்வர் பதவியை குறிவைத்து தங்களது காய் நகர்த்தலை முன்னிலைப் படுத்தினாலும், அவர்களுக்கு கூட்டம் கூடுமே தவிர, தேர்தல் சமயத்தில் அவர்களின் காலை வாரிவிட்டுவிடுவார்கள் மக்கள்.

அந்த வகையில் கண்ணதாசன், சிவாஜிகணேசன், மு.க.முத்து, கார்த்திக், பாண்டியன், பாக்கியராஜ், விஜயகாந்த், கமல், நமிதா, கௌதமி, போன்ற பல்வேறு நடிகர் நடிகைகள் அரசியலில் காலடி எடுத்து வைத்தாலும், அவர்களால் இன்றுவரை சாதிக்க முடியாமலேயே கால்வாசி கடலைக் கூட தாண்ட முடியாதவர்களைப் போன்று தவித்து வருகின்றனர்.

இவர்களைப் பார்த்துதான் தமிழகத்தின் சூப்பர் ஸ்டாராக இருக்கும் ரஜினிகாந்த் கூட அரசியல் பிரவேசத்தை தள்ளி வைத்துக்கொண்டே தனது திரையுலக காலத்தை ஓட்டிக்கொண்டுள்ளார்.

அந்த வகையில் தற்போது விஜய் அரசியலின் ஆழத்தை அளந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆனாலும் அரசியல் பிரவேசம் தேவையில்லை அது நாம் நினைப்பது போல இனிப்பான பழம் அல்ல புளிப்பு மிகுந்தது என்று பிரபல நடிகர்கள் விஜய்க்கு அட்வைஸ் செய்து, எந்த முடிவும் எடுக்க முடியாமல் திணறிக் கொண்டுள்ளார் நடிகர் விஜய்.

இவர்களுக்கு கூட்டம் கூடும், ரசிகர்கள் பட்டாளம் விண்ணை முட்டுமளவிற்கு கோஷம் போடுவார்கள், ஆனால் தேர்தல், போட்டி என்று வந்துவிட்டால், நடிகர் நடிகைகளை மெதுவாக கழட்டிவிட்டுவிடுவார்கள் என்ற நிகழ்கால நிகழ்வுகள் அவர்களை அச்சப்படுத்துவதாக உள்ளது.

thiraimalar.com திரைமலர்

இந்த வகையில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவிற்கு பின் தமிழகத்தை ஆள வேறு ஒரு திரைப்படத்தைச் சேர்ந்த நடிகர் வர வாய்ப்பில்லை என்ற நிலையில் தற்போது அந்த எண்ணத்திற்கு எதிராக மீண்டும் ஒரு நடிகர் தமிழகத்தை ஆளும் வாய்ப்பு இருப்பதாக திரைமலர்.காம் குழுவின் தேடுதலுக்கு விடை கிடைத்துள்ளது.

தற்போது தமிழகத்தை ஆளும் தி.மு.க. அரசின் முதல்வர் ஸ்டாலினின் அமைச்சரவையில் விளையாட்டுத்துறை அமைச்சராக விளங்கும், முதல்வரின் மகனும், திரைப்பட நடிகருமான நடிகர் உதயநிதி ஸ்டாலின், தமிழகத்தை ஆளும் முதல்வராக, சினிமாத்துறையைச் சார்ந்த இவர் வருவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளதாக கூறப்படுகிறது.





உதயநிதி ஸ்டாலின், தமிழ்த் திரைப்பட நடிகரும், தயாரிப்பாளரும் அரசியல்வாதியும் மற்றும் திமுக இளைஞர் அணி செயலாளரும் தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் என்று பல்வேறு பொறுப்புகளை தன்னகத்தில் சுமந்துக் கொண்டுள்ளார்.

ரெட் ஜெயண்டு மூவி என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ளார். இவர் தற்போது தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக உள்ளார்.

முன்னாள் முதல்வரான மு. கருணாநிதியின் பேரனும் இப்போதைய முதல்வரான மு. க. ஸ்டாலினின் மகனும் ஆவார். சென்னை லயோலா கல்லூரியில் படிக்கும் போது இவருடன் படித்த கிருத்திகா என்பவரைத் திருமணம் செய்துள்ளார்.

விஜய், திரிஷா நடித்த குருவி எனும் திரைப்படம் உதயநிதி ஸ்டாலினின் தயாரிப்பில்வெளிவந்த முதல் திரைப்படமாகும். உதயநிதி ஸ்டாலினை வழங்குநராகக் கொண்டு வெளிவந்த முதல் திரைப்படம் கௌதம் மேனனின் விண்ணைத் தாண்டி வருவாயா என்ற திரைப்படம் ஆகும்.




திரைப்பட நடிப்பில் ஆர்வமாக நடித்துவந்த உதயநிதி ஸ்டாலின், 2018 மார்ச் முதல்தீவிர அரசியலில் ஈடுபட உள்ளதாக அறிவித்தார். 2019இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ கச் சட்டசபையின் 22 தொகுதிகளுக்கானஇடைத்தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்குமான தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டார். 2019 ஜூலை 7 அன்று திமுக இளைஞர் அணி செயலாளராகத் தேர்தெடுக்கப்பட்டார்.

தமிழக சட்டமன்ற தேர்தலில் பல்வேறு வாக் குறுதிகளைக் கொடுத்து தி.மு.க. ஆட்சி அமைத்த போது எம்.எல்.ஏ.,வாக மட்டும் இருந்த உதய நிதி பின்னர் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டு அரசியல் நுணுக்கங்களை கற்றுத் தேர்ந்தார்.

தற்போது முன்னணி அமைச்சர்களான, துரை முருகன், டி.ஆர்.பாலு, ஜெகத்ரட்ஷகன், ஏ.வ. வேலு, மா.சுப்பிரமணியன், சேகர்பாபு போன்ற அமைச்சர்களின் அரசியல் அனுபங்களை மிஞ்சும் அளவிற்கு, அரசியலில் ஜொலித்து வருகிறார்.

தற்போது தீவிர அரசியலில் ஈடுபடவிருப்பதால் இனி படங்களில் நடிக்கமாட்டேன் என்று வெளிப்படையாக கூறியதிலிருந்து, தி.மு.க.வின் முக்கிய பொறுப்பில் அவர் அமரவிருப்பதால்தான் சினிமாத்துறையை விட்டு விலகப்போகிறார் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த சூழ்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தற்போது ஓய்வை விரும்பும் சூழ்நிலையில், உதயநிதியை துணை முதல்வராக்கி அவருக்கு முதல்வர் பதவிக்கான பயிற்சிகளைக் கொடுத்து சில மாதங்களில் அவரை தமிழக முதல்வராக்கி அவருக்கு அரசியல் அறிவுரை, ஆட்சி அதிகாரத்தின் வழிமுறைகளை கற்றுத் தர முதல்வர் ஸ்டாலின் விரும்புவதாக அறியப்படுகிறது.

முதல்வரின் இந்த எண்ணம் சரியான பாதையில் சென்றால் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவிற்கு பின் உதயநிதி ஸ்டாலின்தான் சினிமாத்துறையிலிருந்து முதல்வரான மூன்றாவது முதல்வராக திகழ்வார்.

தற்போது தி.மு.க. வசம் போதிய எம்.எல்.ஏக்கள் இருப்பு உள்ளதால், தேர்தலில் முதல்வர் வேட்பாளராக போட்டிபோடாமலேயே எம்.எல்.ஏ.க்களின் தேர்விலேயே உதயநிதிஸடாலினால் முதல்வராக முடியும் என்று கூறப்படுகிறது.

தற்போது உதயநிதி ஸ்டாலினை முதல்வராக்கி விட்டால், அவரின் செயல்பாடுகளுக்கு முதல்வர் ஸடாலின் உறுதுணையாக இருந்து வழிநடத்தி அடுத்த தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கும் முதல்வர் பதவிக்கு போட்டியாளராக அறிவிப்பதில் தி.மு.க.விற்கு எந்த பிரச்சனையும் இருக்காது.

ஏற்கெனவே முதல்வர் பதவி வகித்தவர் என்ற பெயருடன் நேரிடையாக முதல்வர் வேட்பாளராகவே களம் காண முடியும் என்ற கணக்கில் உதயநிதியை முதல்வராக்கும் திட்டத்திற்கான பணிகள் நடைபெற்றுவருவதாக அரசியல் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

விரைவில் மூன்றாவது சினிமாத்துறையைச் சார்ந்த முதல்வரை சந்திக்குமா தமிழகம் பொறுத்திருந்து பார்ப்போம்.

– நடராஜன்,
தொலைபேசி எண். 9444264610

# போனஸ் தராத முதலாளியும்
# பிச்சைக்கார டோக்கன் ராஜாவும்

தீபாவாளி பண்டிகையையொட்டி நடைபெற்ற ஒருசில சுவாரஸ்ய நிகழ்வுகளையும், அந்த நிகழ்வுகளுக்கு ஒன்றிபபோகும் ஒரு அரச கதையையும் எளிமையாக பார்ப்போம்.

சமீபத்தில் தீபாவளிப் பண்டிகையையொட்டி தனது நிறுவனத்தில் பணிபரியும் ஊழியர்களுக்கு "ராயல் என்பீல்ட்" பைக்குகளை தீபாவளி இனாமாக கொடுத்துள்ளார் ஒரு தொழிலதிபர்.

இதேப்போன்று சென்ற தீபாவளியன்று வட இந்தியாவில் ஒரு தொழிலதிபர் அனைத்து தொழிலாளர்களுக்கும், இரு சக்கரவாகனம், சொந்த வீடு, தங்க மோதிரம் என்று அவரவர் களின் பணிக்காலத்தை கணக்கிட்டு வழங்கி யுள்ளார்.

இந்த செய்தியை பார்த்த எனக்கு தெரிந்த நபர் பெருமூச்சு விட்டவாறு....

இவங்கதான்யா முதலாளி என்று கூறினார்.

ரொம்ப சலிச்சுக்கிட்டு அவர் கூறியதால், ஏன் நீ வேலை செய்யும் அலுவலகத்தில் உனக்கு என்ன கொடுத்தார்கள் என்று கேட்டதற்கு...

"அல்வா..." என்று சீரியசாக சொன்னார்.

வெறும் ஸ்வீட்டா என்று கேட்டதற்கு...

ஆமாம்பா வருஷந்தோறும் நல்லாத்தான் சம்பாதிக்கிறானுங்க... 100 தலைமுறைக்கு சொத்து சேர்த்து வெச்சிருக்கானுங்க... ஆனால் எந்த பண்டிகைக்கும் இதுவரை போனஸ்ன்ற ஒன்றை கண்ணுல காட்டியதே இல்லை....

அதனால்தான் மேலே உள்ள செய்தியை படிச்சு பெருமூச்சு விட்டேன் என்று கூறினார்.

சரி விடுப்பா... மேலே உள்ள செய்தியில் வர்ற ஓனருங்க கொடைவள்ளல் பரம்பரையா இருப்பாங்க அவங்களுக்கு கொடுக்கணும்ற எண்ணம் ரத்தத்தில் ஊறியிருக்கும்.




உன்னோட ஓனர் பிச்சைக்காரனுக்கு பிறந்தவனா இருப்பான் அதனாலதான் அவனுக்கு பதுக்குற எண்ணம் இருக்குன்னு சொன்னேன்.

என்னய்யா சொன்னே விவரமா சொல்லு பிச்சைக்காரனுக்கு பிறந்தஅரசனா....

ஆமாம்ப்பா ஒரு கதையை சொல்றேன் கேளு...

......................

ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு மந்திரி. இவங்க ரெண்டு பேரும் ஒரு நாள் மாலை நேரம் நடைபயிற்சி போனாங்க. ஒரு ஆத்தங்கரை ஓரமா போயிட்டு இருந்தாங்க. அப்போ அங்கே ஒரு கொடியில வெள்ளரிக்காய் காய்ச்சு தொங்குவதை பார்த்த ராஜா... "மந்திரி அந்த வெள்ளரிக்காய பறிச்சுட்டு வா சாப்பிடலாம்" ன்னு சொன்னார்.

மந்திரி பறிக்க போனார். அங்கே உக்கார்ந்து இருந்த ஒரு குருடன் சொன்னான். ஐயா அது வெள்ளரிக்காய் இல்ல. அது குமட்டி காய். அது தின்னா வாந்தி தான் வரும்.

ராஜா சொன்னார். யோவ் மந்திரி.!! அத பறிச்சு சாப்பிடு. வாந்தி வருதான்னு பாக்கலாம்.

வேற வழி இல்லாம மந்திரி சாப்பிட்டார். உடனே மந்திரிக்கு குமட்டிக்கிட்டு ஒரே வாந்தி.

ராஜா கேட்டார். யோவ்.!! கபோதி..!! இதுக்கு என்ன தீர்வு.? ன்னு.

அந்த குருடன் சொன்னான். அது பக்கத்துல ஒரு கை மாதிரி பச்சை இலை இருக்கும். அத கையில கசக்கி மந்திரி வாயில விட்டா வாந்தி நிற்கும் ன்னு.

ராஜாவும் அப்படியே பண்ண... மந்திரிக்கு வாந்தி நின்னு போச்சு. மந்திரிக்கு போன உசுரு திரும்பி வந்தது.

ராஜா குருடனை பார்த்து கேட்டார். உனக்கு தான் கண் தெரியாதே.? எப்படி சரியா தீர்வு சொன்னாய்.? குருடன் சொன்னான். ராஜா..!! இந்த நாட்ல எங்கேயும் பஞ்சம் பசி பட்டினி. அப்படி இருக்கும் போது எவனாவது வெள்ளரி பிஞ்ச விட்டு வச்சிருப்பானா.? எப்பவும் இயற்கை ஒரு நோய் கொடுக்கற காய கொடுத்தா இறைவன் பக்கத்துலயே ஒரு மாற்று மருந்து வெச்சிடுவார்.

ராஜாவுக்கு சந்தோஷம்.

இந்தா ஒரு டோக்கன். என் அரண்மனையில கிழக்கு வாசலுக்கு போ. பட்டை சாதம் கொடுப்பாங்க. சாப்பிட்டு ஜாலி யா இரு. சொல்லிவிட்டு ராஜா போய்ட்டார்.

கொஞ்ச நாள் கழித்து ஒரு வெளியூர் வியாபாரி ராஜா கிட்ட வந்தான். ராஜா என்கிட்ட வைரம் நிறைய இருக்கிறது. வாங்குறீங்களா ன்னு கேட்டான்.

இது ஒரிஜினலா போலியா ன்னு எப்படி தெரிஞ்சுக்கறதுன்னு ராஜாவுக்கு குழப்பம். மந்திரிய கூப்பிட்டார்.

ஏற்கனவே ஒரு தடவை வாந்தி எடுத்த அனுபவம் இருந்ததால... வைரத்தை முழுங்கித்தொலைக்க சொன்னா என்ன பண்றதுன்னு பயந்துட்டு தெரியாதுன்னுட்டார்.

ராஜா சொன்னார். மந்திரி.!! போய் அந்த கபோதிய கூட்டிட்டு வா. அவன்தான் காரண காரியத்தோட சரியாக சொல்லுவான்.

மந்திரி போய் அந்த குருடனை கூட்டிட்டு வந்தார். ராஜா சொன்னார். டேய் இது ஒரிஜினல் வைரமா.? போலி வைரமா.? இல்லன்னா ரெண்டும் கலந்து இருக்கா ன்னு பார்த்து சொல்லு.

அந்த குருடன் அந்த மொத்த வைரத்தையும் எடுத்து மத்தியான வெயில்ல கொண்டு போய் வெச்சான். கொஞ்ச நேரம் கழித்து அதை கையில எடுத்து பிரிச்சு.... ராஜா இதெல்லாம் வைரம். மற்றது எல்லாம் கண்ணாடின்னு பிரிச்சு கொடுத்துட்டான்.

வியாபாரியும் எதோ தெரியாம நடந்துடுச்சு ன்னு சொல்லி எல்லா வைரத்தையும் இனாமா கொடுத்துட்டு நழுவிட்டான்.

ராஜாவுக்கு ஆச்சர்யம்.

எப்படிப்பா கண்டு பிடிச்ச.? விவரமா சொல்லு.?

குருடன் சொன்னான்.

ராஜா.!! வெயில்ல வைரம் சூடாகாது. ஆனா கண்ணாடி சூடாகும். அதனால சூடானது எல்லாம் கண்ணாடின்னும் சூடு ஆகாதது எல்லாம் வைரம்ன்னும் பிரிச்சேன்.

ராஜா சந்தோஷமா பாக்கெட்ல கைய விட்டு ஒரு டோக்கன் எடுத்து குருடன் கிட்ட குடுத்து போடா மேற்கு வாசலுக்கு. டோக்கன குடுத்து பட்டை



சாதம் வாங்கி சாப்பிட்டு சந்தோஷமா இருன்னு சொல்லி அனுப்பி வச்சார்.

இப்படியே கொஞ்ச நாள் போச்சு. ராஜா தன் மகனுக்கு கல்யாணம் பண்ண வரன் தேட ஆரம்பிச்சார். பக்கத்து ஊர்ல இருந்து எல்லாம் இளவரசி கொடுக்க தயாராக இருந்தாங்க. ராஜாவுக்கு குழப்பம்.

யாரை தேர்ந்து எடுப்பதுன்னு. மந்திரிகிட்ட கேட்கிறார். எல்லா பொண்ணுமே நல்லா இருக்குன்னு பயந்து கிட்டே மந்திரி சொல்றார்.

ராஜா பார்த்தார்.

கூப்புடுங்கடா அந்த கபோதிய.

குருடன் வந்தான்.

ராஜா குருடன் கிட்ட சொன்னார். என் மகனுக்கு கல்யாணம் பண்ண பொண்ணு பார்க்குறேன். எந்த ராஜாவோட குமாரி சரியா இருக்கும்ன்னு காரண காரியத்தோட தெளிவா சொல்லு.

குருடன் சொன்னான்.

ராஜா..!! அடுத்த நாட்டை விட்டுட்டு அதுக்கு அடுத்த நாட்டு ராஜாவோட பொண்ண பாருங்கன்னான். அந்த ராஜா உங்க சம்பந்தி ஆயிட்டா பக்கத்து நாட்டு ராஜா உங்க ரெண்டு பேருக்கும் நடுவில இருப்பான். அப்போ எல்லை பிரச்சினை வராது. பொண்ண கொடுத்ததால அந்த இடைப்பட்ட பகுதில பிரச்சினை வராம பார்த்துப்பான்.

ராஜாவுக்கு ஒரே குஷி.

சபாஷ்.!! இந்தா டோக்கன். அரண்மனையின் வடக்கு வாசலுக்கு போடா. பட்டை சாதம் குடுப்பாங்க. வாங்கி சாப்பிட்டு சந்தோஷமா இரு அப்படின்னார்.

குருடனும் போய்ட்டான்.

கொஞ்ச நாள் போச்சு. ஒரு நாள் ராஜா அந்த குருடனை தன்னோட அந்தரங்க ஆலோசனை அறைக்கு வர சொன்னார்.

டேய்.!!

நான் ஒன்னு கேட்பேன். சரியா காரண காரியதோட சொல்லனும். அப்படின்னார். குருடனும் சரின்னான். இந்த ஊர்ல எல்லோரும் என்னைய

பிச்சைகாரனுக்கு பிறந்த பய அப்படின்னு சொல்றாங்க. இதுக்கு நீ என்ன சொல்ற.? சரியா சொல்லனும் என்றார்.

குருடன் அமைதியா இருந்தான்.

பதிலே பேசல.

ராஜா திரும்ப கேட்டார்.

குருடன் அமைதியா சொன்னான்.

ராஜா நீங்க திரும்ப திரும்ப கேட்கறதால சொல்றேன்.

**நெசமா நீங்க பிச்சை காரனுக்கு பிறந்தவன் தான். அதுல சந்தேகமே வேணாம்** அப்படின்னான்.

ராஜாவுக்கு தூக்கி வாரிப்போட்டது. ரொம்ப வருத்தம். ஏன்டா என்னய பார்த்தா இப்படி கணிச்சே..?? ன்னு வருத்தமா கேட்டார்.

ராஜா...

முதல்ல குமட்டி காய பத்தி சொன்னேன். நீங்க சந்தோஷம் ஆயிட்டீங்க. ஆனா குடுத்தது பட்டை சாதத்துக்கு இலவச டோக்கன்.

நிஜமான ராஜாவா இருந்தா கையில இருந்த மோதிரத்தை கழட்டி குடுத்து இருப்பார்.

அப்புறம் கோடி கணக்குல வைரம் கிடைக்க வழி செஞ்சேன். நிஜமான ராஜாவா இருந்தா கழுத்துல இருந்த வைர மாலைய குடுத்து இருப்பார்.

ஆனா நீங்க குடுத்தது பட்டை சாத டோக்கன்.

மூன்றாவது... ஒரு ராஜ்ஜியமே உங்க கைகுள்ள வருவதற்கு வழி சொன்னேன். உண்மையான ராஜாவா இருந்தா நாலு கிராமத்த எழுதி குடுத்து இருப்பார்.

நீங்க குடுத்தது வடக்கு வாசல் பட்டை சாத டோக்கன்.

**ஆக.... சோத்தை தாண்டி உங்க எண்ணம் போகல. உலகத்துலேயே பெரிய விஷயம் சோறுன்னு முடிவு பண்ணிட்டீங்க. இதுல இருந்து தெரி யல.?**

**நீங்க பிச்சைக்காரனுக்கு பிறந்த வன்னு.? ஏன்னா உங்க புத்தி டோக்க னோடவும் பட்டை சாதத்தோடவும் முடிஞ்சு போச்சு. அதுக்கு மேல போகல என்றான்.**

**மன்னர் வெட்கி தலைகுனிந்தார்.**

நீங்கள் யார் என்பதை உங்களிடம் இருக்கும் பணமோ,சொத்தோ, பதவியோ தீர்மானிப்பதில்லை..

உங்கள் எண்ணங்களே தீர்மானிக்கின்றன.

thiraimalar.com

# வருமானம் முக்கியம் இல்ல.. போராளி முகத்தை மாற்றிய

# Spicejet

"No Crackers. Let's celebrate pollution free Diwali" அப்படின்னு Spicejetகாரன், மதுரை ஏர்போர்ட்டில் ஒரு ஹோர்டிங் வைத்திருக்கிறான்..

சிவகாசில இருந்து வெறும் 65கி.மீ.ல், சிவகாசி முதலாளிகள் அடிக்கடிப் பயன்படுத்தும் ஒரு விமானநிலையத்தில் இப்படி ஒரு ஹோர்டிங்கைப் பார்த்தால் சும்மா விடுவானா சிவகாசிக்காரன்??

தங்கள் ஃபேஸ்புக் பக்கத்தில் Spice-Jet கம்பெனியைக் கிழித்துத் தொங்க விட்டுவிட்டார்கள்..

'Pollution free Diwali, green crackersனு எல்லாம் பேசுறியே,

நீ என்ன pollution free விமானம் ஓட்டுறியா?

இல்ல, ஒயிட் பெட்ரோலுக்குப் பதிலா க்ரீன் பெட்ரோல் போட்டு ஓட்டுறியா??

விமானத்தில் போகிற ஒவ்வொரு பயணிக்கும் சராசரியாக அந்த விமானம் 285கிராம் கார்பன் டையாக்ஸைடை வெளியிடுகிறது ஒவ்வொரு கி.மீ.க்கும்..

அதுவே ரயிலில் வெறும் 14கிராம் தான்..

தினசரி இத்தனை மோசமாகச் சுற்றுச்சூழலை அழிக்கும் நீ அந்த மாதிரி ஹோர்டிங்கை உன் கம்பெனி வாசலில் தான் முதலில் வைக்கணும்..

அதே மாதிரி, உன் ஃப்ளைட் கம்பெனியை மூடிட்டு, விமானத்தை எல்லாம் பழைய இரும்புக் கடைல போட்டுடு ராசா..

அப்புறமா எங்கத் தொழிலைப் பத்திப் பேசு' எனப் பயங்கரக் காட்டமாகவே ஒரு போஸ்ட் போட்டிருக்கிறார்..

'ஏன் தம்பி, ஒயிட் பெட்ரோல் போட்டுட்டு நேரா ஓசோன் லேயர்ல ஓட்டை போடுற நீயெல்லாம் environment பத்திப் பேசலாமா?'ன்னு ஒரு பன்ச்சோடும் முடித்திருக்கிறார்.

பதறிப்போன SpiceJet நிறுவனம் அவசர அவசரமாக 'அது எங்கள் விளம்பரமில்லை, விமான நிலைய அதிகாரிகள் யாரோ வைத்தது' என சமாளித்தார்கள்..

அந்த விளம்பரப் பதாகையும் உடனடியாக நீக்கப்பட்டிருக்கிறது..

நாட்டுல எவன் எவனெல்லாம் அட்வைஸ் பண்ணுறதுன்னு வெவஸ்தையே இல்லாமப் போயிருச்சி..

சமூகத்துக்கு மெசேஜ் சொல்ற முக்காவாசி ஆளுங்க நம்ம SpiceJet மாதிரி டுபாக்கூராத் தான் இருக்காய்ங்க..

இதுபோல ஆட்களை புரட்டிபோட எங்க ஊர்க்காரர் மாதிரி சிலரும் இருப்பதால் தான் இந்த குபீர் புரட்சியாளர்களின் டவுசர்களும் உட னுக்குடன் உருவப்படுகின்றன.

என சமூக வலைதளங்களில் ஸ்பைஸ்ஜெட் நிறுவத்தை வறுத்தெடுக்கிறார்கள்.




thiraimalar.com திரைமலர்

# ரொம்ப கடிக்காம... வலிக்காம கடிக்கும் கடி...

சிவகாசிக்கும் நெய்வேலிக்கும்
என்ன வித்தியாசம்?
சிவகாசில காச கரியாக்குவாங்க.
நெய்வேலிலே கரிய காசாக்குவாங்க!

❍ ❍ ❍

FILE க்கும் PILE க்கும்
என்ன வித்தியாசம்?
FILE–ல் உட்கார்ந்து பார்க்கணும்.
PILE–க்கு பார்த்து உட்காரணும்.

❍ ❍ ❍

செல்போனுக்கும் மனிதனுக்கும்
என்ன வித்தியாசம்?
மனிதனுக்கு கால் இல்லேன்னா
பேலனஸ் பண்ண முடியாது.
செல் போன்ல பேலன்ஸ் இல்லேன்னா
கால் பண்ண முடியாது.

❍ ❍ ❍

ஒவ்வொரு இளைஞனின்
மன உளைச்சலுக்கும் என்ன காரணம்?
மதிப்பெண்ணும்
மதிக்காத பெண்ணும்!

❍ ❍ ❍

வசதி இல்லாதவன் ஆடு மேய்க்கிறான்!
வசதி உள்ளவன் நாய் மேய்க்கிறான்!

❍ ❍ ❍

ஆண்களை அதிக தூரம் நடக்க வைக்கும்
விஷயங்கள் ரெண்டு?
ஒன்று பிகர், மற்றொன்று சுகர்!

❍ ❍ ❍

என்னதான் செண்டிமெண்ட் பார்த்தாலும்
கப்பல் கிளம்பும்போது
பூசணிக்காய் எலுமிச்சம் பழம் வச்சு
நசுக்கினாலும் சங்கு ஊதிட்டுதான் கிளம்பும்.

❍ ❍ ❍

கணிப் பொறிக்கும் எலிப் பொறிக்கும் என்ன
வித்தியாசம்?
கணிப் பொறியில்
எலி வெளியே இருக்கும்.
எலிப் பொறியில்
எலி உள்ளே இருக்கும்..

❍ ❍ ❍

thiraimalar.com திரைமலர்



thiraimalar.com
திரைமலர்
உங்கள் விருப்பமான துறையில்,
சாதிக்க விரும்புபவர்கள், உங்களைப் பற்றிய
தகவலை எங்களுக்கு தெரிவியுங்கள்....
வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம் 9444264610
www.thiraimalar.com இணையதளத்திலும்,
thiraimalar E-Magazine இல் வெளியிட்டு



# ஆயாவை காணோம்

அந்தோணி மகன் லூர்து நண்பன் சுந்தரை அழைத்து கொண்டு தனது அப்பா இறந்துவிட்ட செய்தி கேட்டு மீனவ குப்பம் நோக்கி வருகிறான்.

ஊரே கூட்டமாக அந்தோணி விட்டு வாசலில் இருக்கிறது, “ ஏல லூர்து அந்தோணி நம்மளை விட்டு போய் சேந்துட்டான்டா ” என்றார் சகாயம்.

லூர்துவின் கண்களில் கண்ணிர் ராமேஸ் வரத்தில் இருந்து வர, வர, அழுது கண்கள் சிவந்திருதது

சுந்தர் லூர்துவின் அம்மா மேரியை தேடினான் மேரியை ஆயா என்று அழைப்பது வழக்கம் சுந்தர் அனாதை ஆசிரமத்தில் வளர்ந்து, லூர்துவுடன் பழகி கடலுக்கு சென்று பிழைப்பு நடத்தி வருகிறான்.

மேரியை காணாமல் வீடு முழுவதில் தேடினான், பின்னர் வீட்டின் பின்புறம் போய் பார்த்தபோது மேரி வென்னிர் போட்டுகொண்டு இருந்தாள்.

ஏ, ஆயா இங்க என்ன பண்ணுறே; அங்க தாதா செத்து கிடக்குறார்;

பக்கத்தில் உக்கார்ந்து அழாம; இந்த நேரத்தில் வென்னிர் கேக்குதா? உனக்கு; என்று கோபமாக கத்தினான்.

மேரி கண்களை துடைத்து கொண்டு, “அந்த மனுசனை பத்தி என்னடா தெரியும் உனக்கு என்று தனது பழைய நினைவை சொல்கிறாள்.

தனது வாலிப வயதில் அந்தோணி மாதா கோவில் ஒன்றில் மேரியை சந்திகிரான் காதல் வயப்பட்ட அவன் மேரியை மணக்கிறான்.

நல்லபடியாக கடலுக்கு போய் சம்பாதித்து வருகிறான் அந்தோணி,

மகனும் பிறக்கிறான், ஒரு சமயம் கடலுக்கு செல்லும் போது; இலங்கை இராணுவத்தினால் துப்பாக்கி குண்டு பட்டு மூச்சு திணறல் நோய் வருகிறது

அடிக்கடி வருகிறது அதிலிருந்து வென்னிரில் தான் குளிக்க கொடுக்கிறாள்.



இருபது வருடமாக மேரி இதை வழக்கமாக செய்கிறாள்.

சுந்தரிடம் “கடைசியாக இந்த மனுசன் போகும்போது வென்னிரில் தான் குளுப்பாட்டி அனுப்பனும் அதான் சுட வைக்கிறேன்” என்கி றாள்.

சுந்தர் ஆயாவை பார்த்து கண் கலங்குகிறான்.

– ரா.சுரேஷ் சேதுபதி
கவிஜர் எழுத்தாளர் குறும்படஇயக்குநர்
தொலைபேசி எண்: 9789448144



# மனிதர்களை ஆளும்
# இயந்திரங்கள்

முப்பது வருஷத்துக்கு முன்னால ஒரு கல்யாணவீட்டுக்கு போனோம்னா...

ஆண்கள் அமர்வதற்கு இரும்பு சேர் அல்லது மர சேர் போடப்பட்டிருக்கும். பெண்கள் அமர கலர் கலரா பவானி ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கும்.

சின்ன சின்ன பசங்க எல்லாம் ஓடியாடி விளையாடி கொண்டிருப்பார்கள்.

பெரியவர்கள் தாம்பூலம் நிறைந்த வாயோடு அரசியல் முதல் அகில உலக கதை வரை பேசிக்கொண்டு இருப்பார்கள்.

மண்டத்துல ஒரு ஓரமா பச்ச பெல்ட் கட்டுன பெருசுங்க எல்லாம் சட்டைய கழட்டி போட்டுட்டு ரம்மி விளையாடிக்கொண்டு இருப்பார்கள்.


சட்டைப்பையில் டெஸ்ட்டரோடு அங்கேயும் இங்கேயும் திரியும் மைக்செட் காரரை ஏதோ விஞ்ஞானி மாதிரி பார்ப்பார்கள்.

விஷேஷத்துக்கு வாகனங்களை இயக்கும் ஓட்டுனர்களை பைலட் ரேஞ்சுக்கு மதித்து அவர்களை உபசரிப்பார்கள்.

வழ வழப்பான சில்க்துணியில் பெரியகால ரோடு சட்டை அணிந்து ,தலை முடியை வித்தியா சமாக சீவி யிருக்கும் இளைஞர்களை ஹீரோ போல பார்ப்பார்கள்.

விஷேஷத்துக்கு இருசக்கர வாகனங்களில் வந்தாலே தனிமதிப் புண்டு. அதிலும் புல்லட், எஸ்டி, ராஜ்தூத் "சில்வர் ப்ளஸ் போன்ற வாகனங்களில் வருவோருக்கு சிறப்பு மரியாதை நிச்சயம் உண்டு.

சாப்பாட்டு பந்தியில்நிச்சயம் ஒரு சண்டையும் கோபித்து கொண்டு அடம் பிடிக்கும் நிகழ்வும் நடக்கும்.



இப்படியாக.. ஒரு விஷேஷத்துக்கு போயிட்டு வந்தோம்ன்னா அங்கு நடந்த நிகழ்வுகளின் நினைவு சுவடுகள் மறைய மாதங்களோ வருடங்களோ ஆகும்.

எப்ப இந்த பாழாய்போன செல்போன் வந்துச்சோ... குறிப்பா இணைய வசதியோட ஆண்ட்ராய்டு கைப்பேசிகள் வந்துச்சோ... அப்போ மறைந்து போனது மனித நேயமும் சக மனித நட்பு பாராட்டலும்.

இப்போல்லாம்....

பஸ்சுல, ட்ரையின்ல ,கல்யாண வீட்டுல எழவு வீட்டுல, பார்க்குல, பீச்சுல, தியேட்டர்லனன்னு.... இப்படி எங்கெங்கு போனாலும் குனிந்த தலை நிமிராம பக்கத்துல என்ன நடக்குதுன்னு கூட தெரியாம கைப்பேசியே கதின்னு கிடக்குறோம்.

காக்கா கத்துது... மாமாவும் அத்தையும் வரப் போறாங்கடான்னு ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி அந்த உறவுகளின் வருகைக்காக ஏங்க வைத்த தாய்மார்களின் குரல்கள் மழுங்கடிக்கபட்டு... வாட்சப் வீடியோ கால்களின் சத்தங்கள் சகல வீடுகளிலும் ஒலிக்க தொடங்கிவிட்டது.

விஞ்ஞான வளர்ச்சியால் இயந்திரங்கள் மனிதர்களை ஆதிக்கம் செய்ய ஆரம்பித்துவிட்டது, அன்பு மறைந்து உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இன்னும் எத்தனைக் காலங்கள் மனிதர்களுடன் மனிதத் தொடர்பு இருக்கும் என்பதே கேள்விக் குறியாக மாறிவிட்டது.




# இதுவரை வெளிவந்த இதழ்களை

thiraimalar.com

திரைமலர்

**www.thiraimalar.com**

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

## இணையதளங்களில் இலவசமாக படிக்கலாம்

வாரம்தோறும் நமது இதழை பெற உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும் அனுப்ப வேண்டிய இ-மெயில் முகவரி

**thiraimalarebook@gmail.com**

**Whatsup**

**9444264610 / 8838153880**


Owned, Published by N.Geetharani. Design by SMLGraphics, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : N.Geetharani, Cell: 9444264610.
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com